**சமூக நலத்துறையின் நலத்திட்டங்களுக்கான குடும்ப ஆண்டு வருமான உச்சவரம்பு 1 லட்சத்து 20 ஆயிரம் ரூபாயாக உயர்வு!**

# சென்னை மாநகரத்தில் பெண்களின் பாதுகாப்பிற்கு - 200 இளஞ்சிவப்பு ஆட்டோக்கள்!

## சட்டப் பேரவையில் – சமூக நலன், மகளிர் உரிமைத்துறை மானியக் கோரிக்கை பதிலுரையில் – அமைச்சர் பி.கீதாஜீவன் அறிவிப்பு!

**சென்னை, ஜூன் 24-**

**சட்டப் பேரவையில் 21.6.2024 அன்று சமூக நலன், மகளிர் உரிமைத் துறை மற்றும் மாற்றுத்திறனாளிகள் நலத்துறை மானியக் கோரிக்கை மீதான விவாதத்திற்குப் பதிலளித்துப் பேசிய அமைச்சர் பி.கீதாஜீவன், "சென்னை மாநகரத்தில் பெண்களின் பாதுகாப்பிற்காக இரண்டு கோடி ரூபாய் செலவில் 200 இளஞ்சிவப்பு ஆட்டோக்கள் இயக்கும் திட்டம்" - "சமூக நலத்துறையின் மூலம் செயல்படுத்தப்படும் நலத்திட்டங்களுக்காக குடும்ப ஆண்டு வருமான உச்சவரம்பு 1,20,000 ரூபாயாக உயர்வு" என்பன உள்ளிட்ட பல்வேறு அறிவிப்புகளை வெளியிட்டார்.**

சட்டப்பேரவையில் அமைச்சர் திருமதி பி.கீதாஜீவன் பதிலுரை வருமாறு :-

ஒரு நூற்றாண்டு தமிழ்நாட்டின் வரலாறும், முத்தமிழறிஞர் தலைவர் கலைஞர் அவர்களின் வரலாறும் பிரிக்க முடியாதவை. முத்தமிழறிஞர் தலைவர் கலைஞர் அவர்களின் தொலைநோக்குத் திட்டங்களால் தமிழ்நாடே வளர்ச்சி பெற்றது. ஒடுக்கப்பட்ட, பிற்படுத்தப்பட்ட மற்றும் பெண்களின் வாழ்வில் அவர் ஏற்றி வைத்த விளக்குகள் இன்றும் ஒளிர்ந்து கொண்டிருக்கின்றன. முத்தமிழறிஞர் தலைவர் கலைஞர் அவர்களுக்கு என் முதல் வணக்கம். "காலை உணவுத் திட்டம்" தந்து தாயுமானவரே! "புதுமைப் பெண் திட்டம்" தந்து தந்தையுமானவரே! "ஊட்டச்சத்தை உறுதி செய்யும் திட்டம்" தந்து குழந்தைகளின் உடல்நலத்தின் காவலருமானவரே! "மகளிர் உரிமைத் தொகைத் திட்டம்" தந்து ஒவ்வொரு குடும்பத்திலும், தந்தையாய், சகோதரனாய், மகனாய் நிறைந்தவரே! தமிழ்ப் புதல்வன் திட்டம் தரவிருக்கின்ற தமிழ்நாடு முதலமைச்சரே! நடைபெற்று முடிந்த நாடாளுமன்றத் தேர்தலில் அகில இந்திய அளவில் "இந்தியா" கூட்டணியை உருவாக்கி, தமிழ்நாட்டில் 40க்கு 40 வெற்றி பெற்றதன்மூலம் இந்திய அரசியலமைப்புச் சட்டத்தையும், ஜனநாயகத்தையும் காப்பாற்றிய பெருமைக்கு சொந்தக்காரர், நம்முடைய முதலமைச்சர் அவர்கள்.

### இந்தியாவே பாராட்டும் முதல்வர்!

கழகத் தலைவர் தளபதியார் அவர்களின் மூன்றாண்டுகால நல்லாட்சிக்குக் கிடைத்த அங்கீகாரம்தான் இந்த 40/40 கிடைத்த வெற்றி!

இந்தியாவே பாராட்டும் முதலமைச்சராக, தமிழ்நாட்டின் வளர்ச்சிக்காக கண் துஞ்சாது, ஓய்வின்றி செயலாற்றிவரும் நமது முதலமைச்சர், திராவிட மாடல் அரசின் தலைவர் அவர்களுக்கு எனது வணக்கத்தையும், நன்றியையும் தெரிவித்துக் கொள்கிறேன்

### பெண்களுக்கான திட்டங்கள்!

முதலமைச்சர் அவர்களின் சீரிய வழிகாட்டுதலில் இத்துறை பெண்கள், குழந்தைகள், முதியோர்கள் மற்றும் திருநங்கைகள் உள்ளிட்டோரின் நலன், உரிமை மற்றும் பாதுகாப்பிற்காக தொடர்ந்து பணியாற்றி வருகிறது. பெண்களின் நலனைக் காத்து, அவர்களுக்கு சமுதாயத்தில் நிலவும் சவால்களை எதிர்கொள்ளத் தேவையான வழிமுறைகளை வகுக்கும் மாநில மகளிர் கொள்கை 21.2.2024 அன்று தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களால் வெளியிடப்பட்டது. பெண்களின் உயர் கல்வியை உறுதி செய்ய மூவலூர் இராமாமிர்தம் அம்மையார் புதுமைப் பெண் திட்டம் தொடங்கப்பட்டதால், உயர்கல்வியில் முதலாம் ஆண்டு சேரும் மாணவிகளின் எண்ணிக்கை நடப்பாண்டில் 34 சகவிகிதம் அதிகரித்துள்ளது. இத்திட்டமானது, நடப்பு கல்வியாண்டு முதல் அரசு உதவிபெறும் பள்ளிகளில் படித்த மாணவிகளுக்கும் விரிவுப்படுத்தப்பட உள்ளது. தமிழ்வழிக் கல்வியில் 6 ஆம் வகுப்பு முதல் 12 ஆம் வகுப்பு வரை பயின்று உயர் கல்வி பயிலும் அரசு உதவிபெறும் பள்ளி மாணவிகளும், இனி புதுமைப் பெண் திட்டத்தில் பயனடைவர். பள்ளிக்கு வரும் குழந்தைகளின் எண்ணிக்கை அதிகரிக்கவும், அவர்களின் ஊட்டச் சத்து நிலையை மேம்படுத்தவும், முதலமைச்சரின் காலை உணவுத் திட்டத்தை அறிமுகப்படுத்தியதில் தமிழ்நாடு முன்னோடி மாநிலமாக உள்ளது. தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களால் முதலமைச்சரின் காலை உணவுத் திட்டம் தொடங்கப்பட்டு, தற்போது இத்திட்டத்தில் 30,992 பள்ளிகளைச் சார்ந்த 15,76,000 மாணவ மாணவிகள் பயனடைகின்றனர். மேலும், இந்த நிதியாண்டில் கிராமப்புற பகுதியில் உள்ள 4,014 அரசு உதவிபெறும் தொடக்கப்பள்ளிகளில் பயிலும் சுமார் 2 இலட்சம் மாணவ, மாணவிகள் பயனடையும் வகையில், இத்திட்டம் விரிவாக்கம் செய்யப்பட உள்ளது. முதலமைச்சரின் பெண் குழந்தைகள் பாதுகாப்பு திட்டத்தில், 18 வயது நிறைவடைந்த பெண் குழந்தைகளுக்கு, முதிர்வுத் தொகை வழங்கிட முதலமைச்சரின் அறிவுரைப்படி சிறப்பு நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு, 2021 ஆம் ஆண்டு முதல் 2024 ஆம் ஆண்டு மே மாதம் வரை 18 வயதுக்கு மேற்பட்ட 1,77,281 பெண் குழந்தைகளுக்கு 422 கோடியே 29 இலட்சம் ரூபாய் முதிர்வுத் தொகையாக அவர்களுக்கு வழங்கப்பட்டுள்ளது என்பதை நான் மகிழ்ச்சியோடு தெரிவித்துக்கொள்கிறேன். தமிழ்நாடு அரசு திருநங்கைகளையும் உள்ளடக்கிய சமூகத்தை உறுதிப்படுத்துவதற்காக தொடர்ந்து பாடுபட்டு வருகிறது. தமிழ்நாடு திருநங்கைகள் நல வாரியம் அமைத்து, திருநங்கைகளுக்கு பல்வேறு நலத் திட்டங்களை செயல்படுத்தி வருவதன்மூலம் நாட்டிலேயே தமிழ்நாடு முன்னோடி மாநிலமாக செயல்பட்டு வருகிறது. திருநங்கைகளுக்கான மாநிலக் கொள்கை தற்போது தயாரிக்கப்பட்டு, விரைவில் வெளியிடப்பட உள்ளது என்பதை நான் தெரிவித்துக்கொள்கிறேன். நடப்பு நிதியாண்டு முதல் திருநங்கைகளின் உயர்கல்விக்காக திருநங்கைகள் நலவாரியம்மூலம் கல்விக் கட்டணம் மற்றும் விடுதிக் கட்டணத்தை வழங்கிட முதலமைச்சர் அவர்கள் உத்தரவிட்டுள்ளார்கள். கைம்பெண்கள் மற்றும் ஆதரவற்ற மகளிர் வாரியம் உருவாக்கப்பட்டு, பிரத்யேக செயலி ஒன்று உருவாக்கப்பட்டு, வாரிய உறுப்பினர் சேர்க்கை துவக்கி வைக்கப்பட்டுள்ளது. இவ்வாரியத்திற்கு சமூக பாதுகாப்பு திட்டங்களுக்காக முதலமைச்சர் அவர்கள் ரூபாய் 1 கோடியே 6 இலட்சம் ரூபாய் இந்த ஆண்டு முதல் நிதி ஒதுக்கீடு செய்துள்ளார்கள் என்பதைக் கூறிக்கொள்ள விரும்புகிறேன்.

இந்தியாவிலேயே முதல்முறையாக BIS தரத்திலான ஊட்டச்சத்து மாவு குழந்தைகளுக்கும், தாய்மார்களுக்கும் வழங்குதல் மற்றும் ஊட்டச்சத்தை உறுதிசெய் திட்டம், ஊட்டச்சத்துக்காக குழந்தைகளுக்கு செறிவூட்டப்பட்ட பிஸ்கட்கள், மருத்துவ உயர் சிகிச்சைகள், தொடர் மருத்துவ ஆலோசனை, சூடாக சமைத்த உணவுடன் முட்டை வழங்குதல் உள்ளிட்ட திட்டங்களால் குழந்தைகள் மற்றும் பெண்களிடையே ஊட்டச்சத்து குறைபாடு மற்றும் நுண்ஊட்டச்சத்து குறைபாடுகளின் தாக்கம் குறைந்து வருகிறது. தற்போது அதன் விகிதம் தேசிய சராசரியை விட குறைவாகவே உள்ளது. குழந்தைகளிடையே ஊட்டச்சத்து குறைபாட்டை குறைப்பதற்காக தமிழக முதல்வர் அவர்கள் 'ஊட்டச்சத்தை உறுதிசெய்' எனும் மகத்தான திட்டத்தை அறிவித்தார்கள். ஊட்டச்சத்தை உறுதிசெய் திட்டத்தின் பயன்கள் குறித்து சென்னை மருத்துவக் கல்லூரி மாணவர்களால் மதிப்பீடு செய்யப்பட்டது. அம்மதிப்பீட்டு அறிக்கையில் பிறந்தது முதல் 6 மாதம் வரையுள்ள கடுமையான ஊட்டச் சத்து குறைபாடுகள் உள்ள குழந்தைகளில் சுமார் 75 சதவிகித குழந்தைகள் இயல்பு நிலைக்கு முன்னேறியுள்ளதாக அந்த அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது.



தமிழ்நாடு அரசின் மதிய உணவுத் திட்டம் மற்றும் ஒருங்கிணைந்த குழந்தை வளர்ச்சித் திட்டத்தில் பயன்பெறும் குழந்தைகளுக்கு நாளொன்றுக்கு வழங்கப்படும் உணவுபொருட்களுக்கான செலவினத்தொகை, அதாவது காய்கறிகள், உப்பு, தாளிதப்பொருட்கள் மற்றும் எரிபொருளுக்கான செலவினம், கடந்த ஜனவரி 2024 முதல் உயர்த்தி வழங்கப்பட்டுள்ளது. குழந்தைகள் நலன் மற்றும் சிறப்புச் சேவைகள் துறையின்கீழ் இயங்கும் குழந்தைகள் இல்லம், கூர்நோக்கு இல்லங்கள், சிறப்பு இல்லங்கள், அரசினர் பாதுகாப்பு இல்லங்கள் ஆகிய நிறுவனங்களின் செயல்பாடுகளை மேம்படுத்திட முதலமைச்சர் அவர்கள் ஓய்வு பெற்ற நிதியரசர் சந்துரு அவர்களின் தலைமையில் ஒரு நபர் குழு அமைத்து உத்தரவிட்டார். அக்குழு அளித்த பரிந்துரைகளை நடைமுறைப்படுத்திட நிதி ஒதுக்கீடும் செய்து தந்துள்ளார் முதலமைச்சர் அவர்கள் என்பதை உறுப்பினர்களுக்குத் தெரிவித்துக்கொண்டு, முதலமைச்சர் அவர்களுக்கும் இத்தருணத்தில் எனது மனமார்ந்த நன்றியையும் தெரிவித்துக்கொள்கிறேன். பாலியல் குற்றங்களில் பாதிக்கப்பட்ட குழந்தைகளின் எதிர்கால நலன் மற்றும் மறுவாழ்விற்கு பாலியல் குற்றங்களிலிருந்து குழந்தைகளை பாதுகாக்கும் சட்டம் 2012ன்கீழ் இழப்பீட்டு தொகை வழங்கும்பொருட்டு, தமிழ்நாடு பாதிக்கப்பட்ட குழந்தைகளுக்கான இழப்பீட்டு நிதி உருவாக்கப்பட்டு, முதலமைச்சர் தளபதியார் அவர்கள் முதலமைச்சராக பொறுப்பேற்ற நாள்முதல் இதுநாள்வரை 3747 பாதிக்கப்பட்ட குழந்தைகளுக்கு 57 கோடியே 98 இலட்ச ரூபாய் வழங்கப்பட்டுள்ளது.

தமிழ்நாடு அரசு, தன்னார்வத் தொண்டு நிறுவனங்களின்மூலம் செங்கல்பட்டு, மதுரை, நாமக்கல், திருநெல்வேலி மற்றும் திருச்சி மாவட்டங்களில் தலா ஒரு மையமும், சென்னை மாவட்டத்தில் இரண்டு மையங்களும் என மொத்தம் ஏழு குழந்தைகளுக்கான பிரத்யேக போதை தடுப்பு மையங்கள் ஏற்படுத்தியுள்ளது. மேலும், கூடுதலாக கோயம்புத்தூர், தஞ்சாவூர், வேலூர், சேலம் மற்றும் கடலூர் ஆகிய மாவட்டங்களிலும் தலா ஒரு மையம் வீதம் மொத்தம் ஐந்து மையங்கள் தமிழ்நாடு அரசால் அமைக்கப்படவுள்ளன. இதன்மூலம் குழந்தைகளிடையே காணப்படும் போதை மருந்து மற்றும் போதைப் பொருட்களுக்கு அடிமையாதல் ஆகிய பிரச்சினைகளுக்கு தீர்வு காண வழிவகை செய்துள்ளது. பல்வேறு போதைப்பொருட்களுக்கு அடிமையாகியுள்ள சிறார்களுக்கு இம்மையங்களில் இலவச சிகிச்சை அளிக்கப்பட்டு, ஆலோசனைகள் வழங்குவதன்மூலம் அவர்களுக்கு மறுவாழ்வு அளிக்க நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது என்பதை நான் இங்கு கூறிக்கொள்ள விரும்புகிறேன்.

- **வறுமைக் கோட்டிற்கும் கீழ் உள்ள 200 மகளிருக்கு சுயதொழில் செய்திட தலா 50 ஆயிரம் ரூபாய் மானியம்!**
- **6 அரசு பணிபுரியும் மகளிர் விடுதிகள் மறு சீரமைப்பு!**
- **2,020 முதியோர் பயனடையும் வகையில் யோகா, மூச்சுப் பயிற்சி, தியானப் பயிற்சி**
- **ஆதரவற்ற முதியோர் நலனுக்காக 7 சுற்றுலாத் தலங்களில் உள்ள முதியோர் இல்லங்களில், சிறப்பு தங்கும் வசதிகள்.**
- **5,590 குழந்தைகள் மையங்கள், சீர்மிகு குழந்தைகள் மையங்களாக தரம் உயர்த்தப்படும்.**
- **6,527 குழந்தைகள் மையங்களில் 11 கோடியே 10 இலட்சம் ரூபாய் மதிப்பீட்டில் முறையான குடிநீர் வசதி.**
- **29,236 அங்கன்வாடிப் பணியாளர்களுக்கு பழைய திறன் கைப்பேசிகளுக்கு பதிலாக புதிய திறன் கைப்பேசிகள்.**
- **சென்னை, திருச்சிராப்பள்ளி, இராமநாதபுரம், மதுரை மற்றும் திருவண்ணாமலை மாவட்டங்களில் தன்னார்வத் தொண்டு நிறுவனங்கள் மூலமாக இரவல் பெறுவோர்களின் மறுவாழ்வுக்கான இல்லங்கள்.**

### ஊழியர் நலன் காக்கும் அரசு!

இங்கு சட்டமன்ற உறுப்பினர் மாரிமுத்து அவர்கள் உரையாற்றும் போது, அங்கன்வாடி மற்றும் சத்துணவு ஊழியர்களைப் பற்றி கூறினார்கள். அங்கன்வாடி மற்றும் சத்துணவு ஊழியர்களுக்கு ஒரு அங்கீகாரம் கொடுத்ததே நம்முடைய முத்தமிழறிஞர்கள் கலைஞர் அவர்கள் என்பதை நான் இங்கு குறிப்பிட்டுக் கூற விரும்புகிறேன். அவர்களுக்கு அடிப்படை ஊதியமாக ரூ.7700/- என்று அவர்களுக்கு வழங்கப்படுகிறது. முன்னாள் முதலமைச்சர் கலைஞர் அவர்கள் அவர்களுக்கு சிறப்பு காலமுறை ஊதியமாக, ஒரு சிறப்பு ஊதியம் வழங்கப்படும் என்று 2008 ஆம் ஆண்டு அறிவித்தார்கள். அன்றிலிருந்து அவர்களுக்கு அகவிலைப்படி, வீட்டுவிலைப்படி, நகர ஈட்டுப்படி, மருத்துவபடி, மலைவாழ்படி, குளிர் காலப்படி, ஒய்வூதியம், ஒவ்வோர் ஆண்டும் ஊதிய உயர்வு என்று தமிழ்நாடு அரசின்மூலம் அத்துணை சலுகைகளும் அவர்கள் பெற்று வருகிறார்கள். ஆகவே அவர்கள் பணியில் இணையும்போது 13510 ரூபாய் சம்பளமும் பெறுகிறார்கள். தொடர்ச்சியாக அவர்களுக்கு ஒவ்வோர் ஆண்டும் இவையெல்லாம் வழங்கப்பட்டு வருகின்றது. பதவி உயர்வும் முறையாக நம்முடைய முதலமைச்சர் அவர்கள் பொறுப்பேற்ற பிறகு வழங்கப்பட்டு வருகிறது என்பதை நான் இங்கு கூறிக்கொள்ள விரும்புகிறேன். ஆகவே, ஊழியர்களின் நலனிலும் அக்கறை காட்டும் அரசு இந்த அரசு என்பதை நான் இங்கே கூறிக்கொள்ள விரும்புகிறேன்.

அடுத்து சமூக நலன் மற்றும் மகளிர் உரிமைத் துறை பற்றிய புதிய அறிவிப்புகளை இந்த சபைக்கு நான் அறிவிக்க விரும்புகிறேன்.

சென்னை மாநகரத்தில் இரயில் நிலையங்கள் மற்றும் பேருந்து நிலையங்களில் பெண்களால் இயக்கப்படும் ஆட்டோக்களில் பெண்கள் மற்றும் குழந்தைகள் தனியாக பாதுகாப்புடன் பயணம் செய்ய ஏதுவாக தனி வண்ணம் கொண்ட பெண்களுக்கான உதவி எண் மற்றும் இருப்பு நிலைகலன் அமைப்பு (GPS) பொருத்தப்பட்டு காவல் துறை மூலம் கண்காணிக்கப்படும் வகையில் இளஞ்சிவப்பு ஆட்டோ (Pink Auto) நடைமுறைப்படுத்தப்படும்.

வாகனம் ஓட்டுவதில் உரிமம் பெற்ற, ஆர்வமுள்ள 200 பெண்கள் தேர்வு செய்யப்பட்டு, அவர்களுக்கு ஆட்டோ வாங்குவதற்கு, ஆட்டோவின் மொத்த விலையில் 1.00 இலட்சம் ரூபாய் அரசால் மானியமாக வழங்கப்படும். கடன் உதவிக்காக தேசியமயமாக்கப்பட்ட அல்லது இதர வங்கிகளுடன் இணைக்கப்படுவார்கள்.

தமிழ்நாட்டில் தற்போதுள்ள பொருளாதார முன்னேற்றம் காரணமாக தனிநபர் வருமானம் மற்றும் வாழ்வாதாரம் ஏற்றம் பெற்றுள்ளது. சமூக நலன் மற்றும் மகளிர் உரிமைத் துறையின் மூலம் பெண்கள் மற்றும் பெண் குழந்தைகளுக்காக செயல்படுத்தப்பட்டு வரும் நலத்திட்டங்களான முதலமைச்சர் பெண் குழந்தைகள் பாதுகாப்பு திட்டம், ஈ.வி.ஆர்.மணியம்மையார் நினைவு விதவை மகள் திருமண உதவித் திட்டம், சத்தியவாணி முத்து அம்மையார் நினைவு இலவச தையல் இயந்திரம் வழங்கும் திட்டம் உள்ளிட்ட பல்வேறு சமூக நலத்திட்டங்களில் பயன் பெறுவதற்காக வரையறுக்கப்பட்டுள்ள தகுதிகளில் ஒன்றான குடும்ப ஆண்டு வருமான உச்சவரம்பினை 72,000 ரூபாயிலிருந்து 1,20,000 ரூபாயாக உயர்த்தப்படும். இதன் மூலம் ஏழை குடும்பங்களை சார்ந்த தகுதி வாய்ந்த பெண்கள் மற்றும் பெண் குழந்தைகள் அதிகளவில் பயன்பெறுவர்.

கைம்பெண்கள் மற்றும் ஆதரவற்ற மகளிர் நல வாரியத்தில் பதிவு செய்துள்ள கைம்பெண்கள், கணவனால் கைவிடப்பட்ட பெண்கள், நலிவுற்ற பெண்கள், ஆதரவற்ற பெண்கள் மற்றும் பேரிளம்பெண்கள் ஆகியோரிலிருந்து வறுமை கோட்டிற்கு கீழ் உள்ள 200 பயனாளிகளை தேர்வு செய்து, அவர்கள் சுயதொழில் செய்து சுயமரியாதையுடன் சமுதாயத்தில் வாழ, நடமாடும் உணவகங்கள், பழங்கள் மற்றும் காய்கறி வியாபாரம், நடமாடும் சிற்றுண்டி கடைகள், நடமாடும் பழச்சாறு கடைகள், சலவைக் கடைகள் (Ironing shop) போன்ற சுயதொழில்கள் மூலமாக நிலையான வருமானம் பெற, அவர்களின் வாழ்வாதாரத்தை மேம்படுத்தும் வண்ணம் கைம்பெண்கள் மற்றும் ஆதரவற்ற மகளிர் நல வாரியத்தின்மூலம் ஒரு பயனாளிக்கு 50,000 ரூபாய் வீதம் 200 பயனாளிகளுக்கு 1.00 கோடி ரூபாய் செலவினத்தில் மானியம் வழங்கப்படும்.

### "பெண்களுக்கான தோழி"

வீட்டைவிட்டு வெளியிடங்களில் பணிபுரிய வரும் மகளிருக்கு உதவும் வகையில், அனைத்து மாவட்டங்களிலும் பாதுகாப்பு மற்றும் இனிமையான சூழலுடன் நியாயமான கட்டணத்தில் பணிபுரியும் மகளிர் விடுதிகள் அரசால் ஏற்படுத்தப்பட்டு வருகின்றன.

பணிபுரியும் மகளிர் விடுதிகளை உருவாக்குதல், புதுப்பித்தல், வடிவமைத்தல், கட்டுதல், மேம்படுத்துதல், செப்பனிடுதல் ஆகிய பணிகளை தமிழ்நாடு பணிபுரியும் மகளிர் விடுதிகள் நிறுவனம் செய்து வருகிறது.

திருவள்ளூர், கோயம்புத்தூர், திருப்பூர், புதுக்கோட்டை, தூத்துக்குடி மற்றும் மதுரை ஆகிய 6 மாவட்டங்களில், 190 படுக்கைகள் கொண்ட அரசு பணிபுரியும் மகளிர் விடுதிகள் 1.00 கோடி ரூபாய் செலவினத்தில் தமிழ்நாடு பணிபுரியும் மகளிர் விடுதிகள் நிறுவனம்மூலம் மறுசீரமைக்கப்படும்.

கைம்பெண்கள், கணவனால் கைவிடப்பட்ட பெண்கள், நலிவுற்ற பெண்கள், ஆதரவற்ற பெண்கள் மற்றும் பேரிளம் பெண்கள் ஆகியோருக்கு கைம்பெண்கள் மற்றும் ஆதரவற்ற மகளிர் நல வாரியம்மூலம் மாவட்ட அளவில் நிதியினை முறையாக கையாளுதல், சொத்துரிமை, குடும்ப வன்முறைகளிலிருந்து உரிய பாதுகாப்பு, இலவச சட்ட உதவி, அரசின்மூலம் செயல்படுத்தப்படும் திட்டங்கள் குறித்த விழிப்புணர்வினை ஏற்படுத்த 40 கருத்தரங்குகள் 50.00 இலட்சம் ரூபாய் மதிப்பில் நடத்தப்படும்.

33 அரசு இல்லங்களில் (அரசு சேவை இல்லம் மற்றும் அன்னை சத்யா குழந்தைகள் இல்லம்) தங்கியுள்ள மாணவிகளுக்கு, குடும்ப ஆதரவு அமைப்பு இல்லாத காரணத்தினால் கடினமான சூழ்நிலைகளிலும் தங்களைத் தாங்களே தற்காத்துக் கொள்வது மிகவும் அவசியமாகும். தற்காப்புக் கலையை கற்றுக்கொள்ளும் மாணவிகளுக்கு அந்தக் கலை ஒரு தன்னம்பிக்கையைக் கொடுத்து, பொதுவெளியில் செயல்படுவதற்கு கூடுதல் தைரியத்தைக் கொடுக்கின்றது.

எனவே, 6 அரசு சேவை இல்லங்கள் மற்றும் 27 பெண் குழந்தை இல்லங்களில் தங்கியுள்ள மாணவிகளுக்கு தற்காப்புக் கலை மற்றும் விளையாட்டுப் பயிற்சி வழங்குவதற்கு தகுதிவாய்ந்த பயிற்றுநர்கள் மாதம் ரூபாய் 25,000/ வீதம் 33 இல்லங்களில் நியமிக்கப்பட்டு 1.00 கோடி ரூபாய் மதிப்பில் பயிற்சி அளிக்கப்படும்.

குழந்தைத் திருமணம் என்பது குழந்தைகளின் உரிமைகளை மீறுவதுடன், அவர்களின் உடல் நலம், கல்வி மற்றும் வாழ்க்கையில் கடுமையான எதிர்மறை விளைவுகளை ஏற்படுத்துகிறது. குழந்தைத் திருமணத்தால் ஏற்படக்கூடிய தீமைகள் குறித்து உயர்நிலை மற்றும் மேல்நிலைப் பள்ளிகளில் படிக்கும் மாணவ, மாணவியருக்கு விழிப்புணர்வு ஏற்படுத்தும் வகையில், குழந்தைகள் உதவி எண்களுடன் குழந்தைத் திருமணத்தின் விளைவுகள் மற்றும் குழந்தைத் திருமணத் தடைச் சட்டத்தின்கீழ் உள்ள தண்டனைகள் ஆகியவற்றை சித்தரித்து, குழந்தைகளுக்கு விழிப்புணர்வு ஏற்படுத்தும் வகையில், விழிப்புணர்வு பலகை ஒன்று (3x2 அடி அளவு) ரூபாய் 500/ வீதம் 12,567 அரசு மற்றும் தனியார் உயர்நிலை மற்றும் மேல்நிலைப் பள்ளிகளில் மொத்தம் 62.83 இலட்சம்

தொடர்ச்சி 10 ஆம் பக்கம்